

## உடுமலை அருகே

# குழந்தைகளுக்கு கைவினை போட்டி

உடுமலை, செப்.24—

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த பள்ளி பாளையத்தில் இயங்கி வருகிறது வேதவியாஸ் பள்ளி.இங்கு படிக்கும் மாணவர்களுக்கு படிப்புடன் பல்வேறு திறன்கள் கற்றுதரப்படுகிறது. அந்த வகையில் இப்பள்ளியில் பெற்றோர்—ஆசிரியர் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. இதில் குழந்தைகளின் திறனை வெளிப்படுத்தும் வகையில் நடந்த போட்டியில் பல்வேறு கைவினை பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான முடிச்சுக்கல், கொக்கி பின்னல் உள்ளிட்ட பின்னல் பொருட்களை செய்து அசத்தினர். இது அனைவரின் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.